

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று(7.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர் கான் பக்ரீத் திருநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தேனி மாவட்டம் - 'மகளிர் விடியல் பயணம்' திட்டம்:

# முதலமைச்சருக்கு மகளிர் நெஞ்சார்ந்த நன்றி !

**சென்னை, ஜூன் 8-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.**

குறிப்பாக பெண்களின் வளர்ச்சி தான் நாட்டின் உண்மையான வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு பெண்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும் செயல்படும் வகையிலும், அவர்களின் வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு, ஆகியவற்றினை உறுதி செய்யும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், இலவச பேருந்து பயண திட்டம், பெண்களின் உயர் கல்வியை ஊக்கப்படுத்தும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.



பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும். படிப்பதற்கு மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்து பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடியல் பயணத் திட்டத்தின் மூலம் ஏராளமான பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். பிறரை எதிர்பாராமல் தங்கள் வேலைகளை சுயமாக செய்து கொள்கிறார்கள்.

அதனடிப்படையில், கடந்த 4 ஆண்டுகளில் தேனி மாவட்டத்தில் விடியல் பயணத் திட்டத்தில் இதுவரை 32.18 கோடி மகளிர் கட்டணமில்லாமல் பயணங்கள் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர். 14.53 இலட்சம் எண்ணிக்கையிலான மகளிர்கள் கட்டணமில்லாமல் மலை வழித்தட பேருந்து பயணங்கள் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். 2.22 இலட்சம் திருநங்கைகள் மற்றும் 22.33 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணங்கள் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

மேலும், 82 புதிய புறநகர் பேருந்துகள், 13 புதிய நகரப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் தெரிவித்ததாவது.**



தனலெட்சுமி

**தனலெட்சுமி:** நான் குடும்பத் தலைவியாக உள்ளேன். முன்பெல்லாம் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவது மற்றும் பிற தேவைகளுக்கு வெளியில் செல்வது போன்ற வேலைகளை எனது கணவரே செய்வார்.

ஆனால், மகளிருக்கான இலவச பேருந்து பயணத் திட்டம் தொடங்கியதிலிருந்து எனது கணவரை எதிர்பார்க்காமல் அனைத்து வேலைகளையும் நானே செய்து கொள்கிறேன். இதனால் என் கணவரின் வேலைச் சுமையும் குறைக்கப்பட்டுள்ளது.

எங்களைப்போன்ற ஏழை எளிய மக்களின் நலனுக்காக இத்தகைய சிறப்பானதொரு திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**ஜோதி:** நான் தேனி மாவட்டம் தாடிச்சேரி பகுதியில் வசிக்கிறேன். நான் தற்பொழுது நர்சிங் பயின்று வருகிறேன். தினசரி எங்கள் வீட்டிலிருந்து கல்லூரிக்கு இலவச பேருந்து மூலம் பயணம் செய்கின்றேன். மகளிர் விடியல் பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் என்னைப்போன்று கல்லூரி பயிலும் மாணவிகளின் பேருந்து கட்டணத் திற்கான சுமை குறைக்கப்பட்டுள்ளது. மேலும், நாங்கள் இலவசமாக பயணம் செய்வதால் பேருந்து கட்டணத்திற்கான தொகையை சேமித்து, எங்களின் பிற தேவையை நிறைவேற்றி கொள்ள முடிகிறது. இதுபோன்று சிறப்பானதொரு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.



ஜோதி



வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் புதிய படப்பை மேம்பாலத்தை மக்களவைக் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு முன்னிலையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., படப்பை ஆ.மனோகரன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# திருவொற்றியூர் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

### மாதவரம் எஸ். சுதர்சனம் பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை, ஜூன் 8-

நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாள் முன்னிட்டு கழகத் தலைவர் மற்றும் இளம் தலைவர் ஆணைக்கிணங்க மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி. வழிகாட்டலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பொதுமக்களுக்கு பயனளிக்ககூடிய பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக எர்ணாவூர் சுனாமி குடியிருப்பு சமுதாய நலக்கூடத்தில் 7-6-25 அன்று இலவச மருந்து மாத்திரைகளுடன் கூடிய மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் குழந்தைகள் சிகிச்சை பெற்றனர்.

மருத்துவ முகாமினை திருவொற்றியூர் மேற்கு தொகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாடு செய்து துவக்கி வைத்தார்.

இந்த முகாமில் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவம், பெண்களுக்கான சிறப்பு மருத்துவம் மற்றும் பொது மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற சிறப்பு மருத்துவர்களால் பங்கேற்ற அனைவருக்கும் சிறந்த சிகிச்சையுடன் இலவச மருந்து மாத்திரைகள் ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள மருந்துகள், மாத்திரைகள் மற்றும் குழந்தைகளுக்கான சத்தான துணை உணவுகள் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழகத் துணைச் செயலாளர் இ.குமரவேல், மாவட்ட பிரதிநிதிகள் ந.ராம்குமார், ஆர்.மோகனசுந்தரம், எஸ்.ஆர்.மலைராஜ், வை.சின்னையன், ஆர்.நவக்குமார், வை.ம.கண்ணதாசன், டி.சக்கரவர்த்தி, எஸ்.ராஜேஷ், ஆர்.நரேன்குமார், எம்.ராமு, ராஜேஷ், ரேஷன் கடை குமார், குணசேகரன், எம்.பாபு, எஸ்.வினோத், கே.சரவணன், இ.பூங்கொடி, சாமுண்டீஸ்வரி வனிதா, புனிதா, எஸ்.ஜோயல், ஜி.கணேஷ், போஸ் வினோத், ஆர்.குணசீலன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.